**தலைப்பு 102 – நிதி மற்றும் வெகுசன ஊடகத்துறை அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நிதி மற்றும் வெகுசன ஊடகத்துறை அமைச்சின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் நிதி மற்றும் வெகுசன ஊடகத்துறை அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் நிதி மற்றும் வெகுசன ஊடகத்துறை அமைச்சிற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி மற்றும் வெகுசன ஊடகத்துறை அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) ஆம் பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்கள் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமைால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது

(ஆ) நிதி மற்றும் வெகுசன ஊடகத்துறை அமைச்சினால் முன்னைய ஆண்டிற்குரியதாக நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமைால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

**1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரைகள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டில்பொருள் மெய்மையாய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அலுவலக கணனிகள், இலத்திரனியல் தொடர்பு மற்றும் தளபாடங்களுக்குரிய பெறுமதி மற்றம் 2018 ஆம் ஆண்டின் நிதியல்லாத சொத்துக்கள் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த சொத்துக்கள் இனங்காணப்பட்டு அதற்குரிய பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும் | குறித்த மீதிகளை இனங்காணும் நடவடிக்கைகளை பூர்த்தி செய்யப்பட்டு வருவதுடன் அதன் காரணமாக 2018 ஆம் ஆண்டின் நிதியல்லாத சொத்துக்கள் கூற்றில் அச்சொத்துக்கள் மற்றும் அதற்குரிய பெறுமதி உள்ளடக்கப்படவில்லையென |

**2. நிதி மீளாய்வு**

**2.1 செலவின முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| (அ) ஒன்றிணைந்த திறைசேரி முகாமைத்துவ தகவல் முறைமையை, செலவின பிரிவு வரை விரிவாக்குவதற்காக ரூபா 500 மில்லியன் குறைநிரப்பு மதிப்பீட்டு நிதி எற்பாட்டை மேற்கொண்டிருந்த போதும் மேற்கொள்ளப்பட்ட நிதிஏற்பாடு 2018 திசெம்பர் மாதத்தின் போது இரத்துச் செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் வருமானமல்லாத பெறுவனவாக | பாதீட்டு முன்மொழிவுகளை செயற்படுத்துதல் முன்னுரிமை செயற்பாடொன்றாக கருதி நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2018 ஆம் ஆண்டில் இச்செயற்பாடு, முறைமை அபிவிருத்தி நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாமை காரணமாக அச்செலவின விடயம் இரத்துச் செய்யப்பட்டு அதற்குரிய நிதிஏற்பாடு நிதி முகாமைத்துவ செயற்தின் செயற்றிட்டத்திற்கு கையளிக்கப்பட்டதாகவும் |

| | | | |
|---|---|---|---|
| | திறைசேரியிடமிருந்து கட்டுநிதி பெறுவனவாக ரூபா 271,130,853 குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் மற்றும் மாதாந்த கணக்குப் பொழிப்புக்களின் பிரகாரம் அது ரூபா 268,310,000 ஆக இருந்தது. அதன் பிரகாரம் ரூபா 2,820,353 ஆன வேறுபா டொன்று அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | 15 செலவின விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா ரூபா 645.95 ஆன மொத்த நிதிஏற்பாடுகளும் சேமிக்கப்பட்டிருந்தன. | நிதிஏற்பாடுகளை செயற்திறனாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்பார்க்கப்பட்ட செலவினம் சமர்ப்பிக்கப்படாத அடிப்படையில் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்ததாகவும் |
| (இ) | செலவினத் தலைப்பின் கீழ் 04 அரச நிறுவனங்களுக்கு ரூபா 233 மில்லியனான மூலதன நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதும் 01 நிறுவனததிற்கு வழங்கப்பட்ட தேறயி நிதிஏற்பாடு மற்றும் எஞ்சிய 03 நிறுவனங்களுகக்காக வழங்கப்பட்ட தேறிய நிதி ஏற்பாடுகளில் 91 சதவீதம் முதல் முதல் 95 சதவீதம் வரையான வீச்சில் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | அவதானிப்புடன் இணங்குகின்றேன் |

## 2.2 கடப்பாடுகளும் பொறுப்புக்களும் ஏற்படுத்துதல்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்காய்வு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 94(1) இன் பிரகாரம் நிதி ஏற்பாடுகளின் பிரகாரம் கடப்பாடுகளை ஏற்படுத்த முன்னர் குறிதத் செலவின விடயங்களில் போதியளவு நிதிஏற்பாடு இருப்பதாக உறுதிப்படுத்தாமல் 12 செலவின விடயங்களை ரூபா 83,951,284 ஆன பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | 2018 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கீடு செய்த நிதிஏற்பாடுகளிலிருந்து பொறுப்புகளுக்கு கொடுப்பனவு செய்ய நேர்நதமையால் குறிதத் செலவின விடயத்தில் நிதிஏற்பாடு போதியளவில் இல்லையெனவும் |

**2.3 முற்பண வழங்கலும் தீர்ப்பனவும்**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த ஓராண்டிற்கு மேற்பட்ட கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 924,255 ஆக இருந்தது. | நிலுவைக் கடன் தொடர்பாக ஆராய்ந்து பாரத்து தாமதமின்றி தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | அறவிடுவதற்கு இயலுமை காணப்படாத கடன் நி.பி 113 இன் பிரகாரம் விட்டு விடுவதற்காக அரச நிதித் திணைக்ககளத்தின் அங்கீகாரத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் எஞ்சிய கடன் தொகையை அறவிடுவதற்காக சட்ட அலுவல்கள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள தாகவும் |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அமைச்சினால் வெளிநாட்டுக் கடன் / மானியங்களின் கீழ் 05 செயற்திட்டங்களுக்காக ரூபா 2,261.5 மில்லியனான நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதில் 03 செயற்திட்டங்களின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படாமை மற்றும் 02 செயற்திட்டங்களின் செயலாற்றல் மந்த கெதியிலும் இருந்த காரணத்தினால் ரூபா 1,041.16 பெறுமதியான அதாவது 46 சதவீத நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைந்து கொள்ள நிதிஏற்பாட்டை செயற்திறனாக பயன்படுத்த வேண்டும். | சட்டம் சார்ந்த மற்றும் நடைமுறை காரணங்களால் நோக்கங்களை அடைந்து கொள்வதில் தாமதம், செயற்திட்ட தொழிற்பாடுகளை ஆரம்பிப்பதில் தாமதம் மற்றும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்படாமையால் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டது. |

**3.2 பெறுகைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) பொது திறைசேரி கட்டிடத்தில் பொருத்தியுள்ள 04 மின்தூக்கி களை கழற்றி அகற்றி 04 புதிய மின்தூக்கிகளை பொருத்துவதற்கான ஒப்பந்தம் தனியார் நிறுவனமொன்றுக்கு ரூபா 21,005,625 தொகைக்கு வழங்கி 2016 ஒக்தோபர் 29 ஆந் திகதி முற்பணமாக ரூபா 4,663,250 வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரை 26 மாதங்கள் கடந்திருந்தும் ஒப்பந்தத்தின் வேலையை ஆரம்பிப்பதற்கு ஒப்பந்தக்காரர் தவறியிருந்தார். | உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பதத்தை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கபட வேண்டும். பெறுகை கால அட்டவணையை மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இப்போது ஒப்பந்தத்திற்குரிய உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட நிபந்தனை களை மாற்றாமல் மீண்டும் ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்ட முற்பணத் தொகையின் பெறுமதிக்கு சமமான முற்பணமொன்று பிணையாகவும் ஒப்பந்த காரரிடம் பெற்றுக் கொண்டுள்ளதாகவும் 2019 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்வதற்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளதாகவும் |
| (ஆ) 2018 பாதீட்டு முன்மொழிவினை இலத்திரனியல் மற்றும் அச்சீட்டு ஊடகங்கள் ஊடாக மக்களை அறிவூட்டுவதற்காகவும் அந்த அறிவித்தல் வடிவைப்பு மற்றும் உற்பத்திக்காக 2018 ஆம் ஆண்டில் அமைச்சினால் ரூபா 73,892,963 செலவிடப்பட்டிருந்த போதும் விளம்பர செயற் பாட்டிற்குரிய விவரக் குறிப்புக்களைத் தயாரித்தல் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரை பெற்றுக் கொள்ளல் அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வுடன் இணங்குவதாகவும் |
| (இ) அமைச்சினால் இரண்டு வருடம் ஊடக சுதந்திரத்தின் வேறுபாடு தொடர்பாக ஊடக நிகழ்ச்சித்திட்டத்தை செயற்படுத்து வதற்கு பத்திரிகை விளம்பரம், தொலைக்காட்சி விளம்பரம் வெளியடல், சமூக ஊடக இணையத்தளங்களில் விளம்பரங்களை வெளியிடல் மற்றும் நிகழ்ச்சிகளை தயாரிப்பதற்காக அரசின் பெறுகை வழிகாட்டல் கோவை பின்பற்றப்படாமல் ரூபா 20,382,180 செலவிடப்பட்டிருந்தது. | அமைச்சின் நோக்கங்களுக்குரிய பிரகாரம் அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | கணக்காய்வுடன் இணங்குவதாகவும் |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரண மீதி ரூபா 11,373.57 ஆக காண்பிக்கப்பட்டிருந்த போதும் நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான தனி மீதிகளின் பெறுமதி உள்ளடக்கப்பட்ட அட்டவணை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் சொத்துக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2018 நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் தனி மீதிகள் உள்ளடக்கப்பட்ட அட்டவணையில் உள்ளடக்க முடியாமல் இருந்தது. |

**4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2015 செப்தம்பர் மாதம் ஐக்கிய நாடுகளின் மாநாட்டில் அங்கத்துவ நாடுகளின் இணக்கப்பாட்டின் பிரகாரம் 2030 அளவில் அனைத்த நாடுகளாலும் அடைந்து கொள்ளக்கூடிய நோக்கங்கள் மற்றம் இலக்குகள் உள்ளடக்கப்பட் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆண்டு ''நிகழ்ச்சிநிரல்'' பிரகாரம் ஒவ்வொரு அரசாங்க நிறுவனத்தினாலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருப்ப துடன் மீளாய்வாண்டிற்குரியதாக தமது விடயப்பரப்பின் கீழ் எடுக்கப்படும் செயற்பாடுகள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பாக அறிந்து உரிய பொருத்தமான நடவடிக்கை எடுக்கபட்டதாக கணக்காய்வின் போது கண்டறியப்படவில்லை. | அமைச்சின் விடயப் பரப்பின் கீழ் எடுக்கப்படும் செயற்பாடுகள் தொடர்பாக நோக்கங்கள் மற்றும் இலக்குகள் இனங்காணப்பட்டு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவித்திருக்கவில்லை. |

**5. மனிதவள முகாமைத்துவம்**

அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் இறுதியில் மொத்த வெற்றிடங்கள் 77 அதாவது அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையில் 19 சதவீதம் வெற்றிடங்களாக இருந்ததுடன் அதில் சிரேஷ்ட மட்டத்தில் 15 வெற்றிடங்கள் காணப்பட்டன. | வெற்றிடங்கள் காணப்படும் அமைச்சின் கடமைகளை வெற்றிகரமாகவும் செயற்திறனாகவும் நிறைவேற்றுவதற்காக பாதகமாக தாக்கமளித்தால் துரிதமாக புர்த்தி செய்யப்பட வேண்டும். | இவ்வெறறிடங்களுக்காக உததியோகத்தர்களை நியமிக்குமாறு பொது நிர்வாக அமைச்சிற்கு அறிவிக்கப் பட்டுள்ளதாகவும் சிரேஷ்ட நிலையில் வெற்றிடங்கள் நிரப்பப்படும் வரை பதில் கடமை அடிப்படையில் கடமை மேவுகை மேற்கொள்ளப்பட்டுள்ள தாகவும் அமைச்சின் கடமைகளை செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் நிறைவேற்று வதற்காக இவ்வெற்றிடங்களை முடியுமான அளவில் நிரப்பப்பட வேண்டுமெனவும் |